**செ.வெ. எண்: 397** **நாள்: 01/07/2011**

## திருக்கோயில் யானைகள் பராமரிப்பிற்கான துறை அலுவலர்களின் ஆலோசனைக் கூட்டம்

****

இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்கள் மற்றும் திருமடங்களுக்குச் சொந்தமான யானைகளை பராமரிப்பது தொடர்பாக துறை அலுவலர்களின் ஆலோசனைக் கூட்டம் இன்று (1.07.2011) முற்பகல் 11.00 மணிக்கு சென்னை, ஆணையர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை, அரசு செயலாளர், திரு டி.என். இராமநாதன், இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு மு. கலைவாணன், இ.ஆ.ப., திரு பீர்.முகம்மது, யானை பராமரிப்பாளர், தென்காசி, டாக்டர் மனோகர், வனத்துறை ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

திருக்கோயில்கள் மற்றும் திருமடங்களுக்குச் சொந்தமான யானைகளை பராமரிப்பது தொடர்பாகவும், அவற்றிற்கு வழங்கப்படும் உணவு, சுற்றுப்புறச் சூழ்நிலை, யானைகளை காலமுறையில் கால்நடை மருத்துவரின் பரிசோதனைக்கு உட்படுத்துதல், சுகாதாரம், தொற்றுநோய்கள் பரவாமல் தடுப்பது குறித்தும் கலந்தாலோசிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் கூடுதல் ஆணையர் (விசாரணை), இணை ஆணையர் (திருப்பணி), இணை ஆணையர் (தலைமையிடம்), திருவேற்காடு, பழநி, திருச்செந்தூர், மதுரை, ஸ்ரீரங்கம் ஆகிய திருக்கோயில்களின் இணை ஆணையர்/செயல் அலுவலர்கள், துணை ஆணையர்/செயல் அலுவலர்கள், சம்பந்தப்பட்ட மண்டல இணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள், உதவி ஆணையர்/செயல் அலுவலர்கள் மற்றும் திருக்கோயில் செயல் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூடுதல் ஆணையர் (விசாரணை )
ஆணையருக்காக.
**இந்து சமய அறநிலையத்துறை, சென்னை.**

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**